# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 179/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.3 P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமுவேல் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சின்னான் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.04.2026.

**முதல் விசாரணை**

நான் R.G. புதுாரில் வசித்து வருகிறேன். மாட்டு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 03.05.2023 ம் தேதி மாலை 6.00-6.15 மணி வாக்கில் நான் மாடு ஏற்ற 7 வது மைல் பிரிவில் நான் சென்று கொண்டிருந்த போது அசா.1 கிருபாகரனை நான் பார்த்தேன் என்று சத்தம் போட்டார். அவர் என்னை பார்த்து காப்பாற்றுங்கள் என்று கூறிக் கொண்டு மயங்கும் நிலையில் என் பக்கத்தில் வந்தார் . ஆஜர் எதிரி அசா.1 ன் கழுத்து பகுதியில் பின்புறம் வெட்டியதனால் அவருக்கு மயக்கம் வந்தது. நான் எனக்கு சொந்தமாக டாடா ஏஸ் வாகனத்தில் குறிச்சி கோட்டை வரைஅழைத்து சென்றேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அசா.1 க்கு 3 ணி நேரம் மேற்படி வெட்டு பட்ட காயத்தினால் இரத்தம் வந்து கொண்டே இருந்தது. இரத்தம் நின்றால் இங்கு பார்க்கலாம் இல்லை என்றால் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல மருத்துவர் சொன்னார். இரத்தம் நின்றதால் அங்கேயே சிகிச்சை பார்க்கப்பட்டது. பின்னர் நான் அங்கிருந்து நான் சென்று விட்டேன் .பின்னர் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நீங்கள் செல்லும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் வசந்தகுமார் இருந்தோம், மற்றவர்கள் இருந்தார்கள் பெயர் தெரியாது. நீங்கள வந்த சமயத்தில் கிருபாகரன் மட்டும் தான் இருந்தார் என்றாலும் எதிரி வெட்டியதை நீங்கள் பார்க்கவில்லை என்றாலும் ஆமாம், வெட்டியது யார் என்று கிருபாகரன் இடம் கேட்டேன் அவர் ஆஜர் எதிரி என்று கூறினார் . நான் முதலில் உயிரை காப்பாற்ற முயன்றேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இ்லை என்றாலும் நீங்கள் கிருபாகரன் என்பவரின் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல நான் உண்மையை தான் சொல்கிறேன்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.